அலங்கார மீன்வளர்ப்பு பண்ணையாளரின் வெற்றிக்கதை

அலங்கார மீன்வளர்ப்பாளரின் முகவரி

திரு.எஸ்.பிரகாஷ்,

கோல்டன் அகுவாரியம்,

21, வர்ணபுரம், 3வது தெரு,

பவானி – 638301.

கைபேசி – 9095920155

9480120155

****

தொகுப்பு : முனைவர்.இரா.சாந்தகுமார்

பல்துறைத்தலைவர்,

மீன்வளத்தகவல் மற்றும் சமூகஅறிவியல் பள்ளி,

மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

தூத்துக்குடி – 628 008.

எனது பெயர் ளு.பிரகாஷ், நான் ஈரோடு மாவட்டம் பவானி பகுதியைச் சேர்ந்தவன். நான் எனது 12ம் வகுப்பு படிப்பை 1994ம் ஆண்டு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முடித்துவிட்டு ஒரு தனியார் கம்பெனியில் மெக்கானிக் பிரிவில் வேலை பார்த்துவந்தேன். எனக்கு சிறுவயதிலிருந்தே மீன், லவ்பேர்ட்ஸ் மற்றும் நாய் வளர்ப்பதில் அதிக ஈடுபாடு உள்ளதால் எனக்கு எங்கள் பகுதியில் உள்ள ஒரு உணவு மீன் வளர்ப்பு பண்ணையில் வேலை கிடைத்தது. அதனை நான் பயன்படுத்தி மீன்களுக்கு என்னென்ன உணவு மற்றும் அது கிடைக்கக்கூடிய இடங்கள் போன்றவற்றை தெரிந்துகொள்ள விரும்பி ஒரு தேடலின்போது எனக்கு நண்பரின் மூலம் **தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியின்** செயல்பாடு மற்றும் அவர்களின் பங்களிப்பு உணவுமீன் மற்றும் அலங்காரமீன் மற்றும் டீயஉமறயவநச யுஙரயஉரடவரசந போன்றவைகள் எனக்கு தெரியவந்தது. நான் பண்ணை பார்க்கும் முதலாளியும் கூட எனக்கு சொன்ன அறிவுரை யாதெனில் உணவு மீன்களை காட்டிலும் கண்ணாடி மீன்தொட்டிகள் மற்றும் மீன்கள்

எதிர்காலத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் அதனால் நீ அதனை சார்ந்த தொழிலை செய் என எனக்கு அறிவுரை மற்றும் ஊக்கத்தை கொடுத்தார்.

இந்த தொழிலை நான் முறைப்படி **2003ம் வருடம் 13.10.2003 முதல் 17.10.2003 வரை 5 நாட்கள் மீன்வளக்கல்லூரியில் மீன்வளர்ப்பு பயிற்சி** பெற்றேன். எனக்கு அங்கு அப்போது பணிபுரிந்துவந்த **பேராசிரியர்கள் ஜேம்சன், பெலிக்ஸ், சாந்தகுமார் மற்றும் ராகவன்** போன்றோர்கள் என்னை ஊக்கப்படுத்தி இந்த அலங்காரமீன் வளர்ப்பு மற்றும் இனப்பெருக்கம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களான கண்ணாடி மீன் தொட்டி புதிதாக செய்தல், மீன்களுக்கு தேவையான உணவு, காற்று புகுத்தி, கண்ணாடி தொட்டிகளுக்கு அலங்காரம் செய்வதற்கான பிளாஸ்டிக் செடிகள், உயிர்செடிகள் மற்றும் கீழே போடக்கூடிய கல் சம்மந்தமான பலவித முகவரிகளை எனக்கு தந்து என்னை இந்த தொழிலினை திறமையாகவும், முறையாகவும், முழுமையாகவும் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி தந்தனர்.

இதனை தொடர்ந்து நான் இதன் மூலம் பலவிதமான பயிற்சிகளை மேற்கொண்டு ஒவ்வொரு கால கட்டங்களிலும் ஒவ்வொருவிதமான மீன்களை இனப்பெருக்கம் செய்து விற்பனை செய்து வருகிறேன்.

குறிப்பாக

2007 – 2009ம் ஆண்டுகளில் - கப்பீஸ் மற்றும் மோலிமீன்கள் உற்பத்தி

2009 – 2011ம் ஆண்டுகளில் - பொன்மீன், சண்டையிடும் மீன் பைட்டர், கருப்பு மூர் உற்பத்தி மற்றும் விற்பனை

2011 – 2013ம் ஆண்டுகளில் -மலேசிய வாஸ்து மீனான பூககொண்டை உற்பத்தி மற்றும் விற்பனை

2013 – 2015ம் ஆண்டுகளில் -உயிர்செடி மற்றும் ரெட்சிர்ம்ப் உற்பத்தி மற்றும் விற்பனை

நான் என்னால் முடிந்தவரை எனது நண்பர்களுக்கு இத்தொழிலினை பற்றி விழிப்புணர்வு கூறி எனது பகுதியில் சுமார் **18 பண்ணைகள்** புதிதாக துவங்க ஏற்பாடுகள் செய்து வருகிறேன். (உணவுபண்ணை 12, அலங்காரமீன் பண்ணை 6) மற்றும் கோவை மாவட்ட பகுதிகளுக்கு மீன் உற்பத்தி மையங்கள் அமைக்க 50% மானிய அடிப்படையில்

25 நபர்களை ஒருங்கிணைத்து இந்த தொழிலினை மேம்பாடு அடைய வழிவகைகளை செய்துவருகிறேன்.

அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்தின் மூலம் நடத்தக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் நான் இந்த மீன்வளர்ப்பு பற்றி கண்காட்சி கூடம் போட்டு எனது ஈடுபாட்டை அளித்துவருகிறேன்.

இந்த ஒரு நல்ல தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்த நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் மீன்வளக்கல்லூரி மற்றும் அதனை சார்ந்த அத்துனை நல்உள்ளங்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள

(S.பிரகாஷ்)

ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பண்ணையாளரின் வெற்றிக்கதை – 1

முனைவர் மு.நாகூர் மீரான், பா.கண்ணன்

திரு. S. கமலக்கண்ணன், B,Com.,

S.K.M. சிவம் மீன் பண்ணை,

கொத்தங்குடி, குடவாசல்,

திருவாரூர் மாவட்டம்

அலைபேசி :



எனது பெயர் திரு. S. கமலக்கண்ணன், B,Com., திருவாரூர் மாவட்டம் கொத்தங்குடி என்னுமிடத்தில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பண்ணை அமைத்து மீன்வளர்ப்பை மேற்க்கொண்டு வருகிறேன். எனது தந்தை ஒரு ஆசிரியர், மேலும் விவசாயத்தையும் ஒரு பகுதியாக செய்து வந்தார். எனது தந்தைக்கு பிறகு விவசாயம் மற்றும் மீன்வளர்ப்பை கடந்த 10 வருடங்களாக மேற்கொண்டு வருகிறேன். ஆரம்பத்தில் ஒரு சிறிய பண்ணைக்குட்டை வைத்துதான் மீன் வளர்த்து வந்தேன். அவ்வப்போது மீன்களை சந்தைப்படுத்தும் போது மீன்களின் அளவு வேறுபாடாக இருந்தது, அதை கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டில் மேலும் ஒரு குட்டை அமைத்து மீன் வளர்ப்பை விரிவுப்படுத்தினேன். ஆரம்ப காலத்தில் குட்டைகளுக்கு குஞ்சு பொரிப்பகத்தலிருந்து குஞ்சுகளை வாங்கி வளர்க்க வேண்டியிருந்தது, ஆகையால் காலப்போக்கில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை கற்றுக்கொண்டு குஞ்சு பொரிப்பகம் ஒன்றை தொடங்கினேன். எனது குட்டைகளுக்கு தேவையான மீன் குஞ்சுகள் போக மீதி குஞ்சுகளை மற்ற பண்ணையாளர்களுக்கு விற்க ஆரம்பித்தேன். தற்பொழுது மூன்று வேலையாட்களை வைத்து 10 ஏக்கர் பரப்பளவில் குளங்களை பராமரித்து வருகிறேன். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வழங்கி வருகிறேன். மேலும் எனது மீன் பண்ணைக்கு வரும் மீன் பண்ணையாளர்களுக்கு தேவையான ஆலோசனை சேவைகளையும் வழங்கி கொண்டியிருக்கிறேன். மீன் குஞ்சுகளுக்கு தேர்வு செய்த தரமான புரதம் நிறைந்த தீவனத்தை கொடுப்பதன் மூலம் நல்ல உற்பத்தியை பெற முடிகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை நெல் ஒரு பிரதான சாகுபடி அப்படி இருக்கும் பட்சத்தில் மீன்வளர்ப்பு ஒரு முக்கிய லாபம் தர கூடிய தொழிலாக இருந்து வருகிறது. எடுத்துகாட்டாக நெல் சாகுபடியை பொறுத்தவரை 1 ஏக்கருக்கு அதிகபட்சமாக 30 மூட்டைகள் வரை தான் நெல் உற்பத்தி செய்ய இயலும். வருமானத்தை பொறுத்தவரை 24,000 வரை கிடைக்க வாய்ப்புள்ளது. உற்பத்தி செலவை பொருத்தவரை 12000 லிருந்து 13000 வரை செலவு ஆகிறது. ஆக நெல் சாகுபடியை பொறுத்தவரை ஏக்கருக்கு 10,000 மட்டுமே லாபம் கிடைக்கிறது. அதே போல் மீன்வளர்ப்பில் 1 ஏக்கர் குளத்தில் 30,000 வரை செலவு செய்தால் குறைந்தது 1,00,000 வரை லாபம் ஈட்டிட முடியும். 30,000 ரூபாய் தீவனம் மற்றும் 30,000 ரூபாய் மீன் குஞ்சு செலவு என மொத்தம் 60,000 முதல் 70,000 வரை

செலவாகும். ஒரு ஏக்கர் குளத்தில் 1.5 டன் மீன்கள் அறுவடை செய்ய இயலும். இதன் விற்பனை விலை 1 கிலோ ரூ.150 வீதம் 1500 கிலோ 1, 50,000 ரூபாய்களாகும், செலவு 60,000 போக மீதம் 90,000 ரூபாய் நிகர லாபம் கிடைக்கும். நெல் சாகுபடியை ஒப்பிடுகையில் 8 மடங்கு லாபம் பெறலாம் இந்த மீன்வளர்ப்பு தொழிலில். எந்த அளவிற்கு தீவனம் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு மீன்கள் வளர்ச்சி இருக்கும். நம்பகத்தனமான ஒரு வருமானம் கிடைக்கும் என நம்பி இந்த தொழில் செய்யலாம். நெல் அறுவடை பருவத்திற்கு வந்தபின் கட்டாயம் அறுவடை செய்ய வேண்டும், இல்லையென்றால் நெல்லானது சேதமடைந்து விலையின்றி போய்விடும். மீன் வளர்ப்பை பொறுத்தவரை விலை உயர்வை பொறுத்து எப்பவேண்டுமென்றாலும் அறுவடை செய்து கொடுக்கலாம்.

மீனின் வளர்ச்சிகேற்ப சரியான விகிதங்களில் தீவனங்கள் அளித்து வருகிறேன். மீனின் வளர்ச்சியை கணக்கிட மாதம் ஒருமுறை மீன் மாதிரிகளுக்கு கணக்கிட்டு தீவனம் அளிப்பேன். பறவைகள் குளத்தில் உள்ள மீன் குஞ்சுகளை கொத்தி செல்வது மற்றும் அதன் எச்சல்கள் மற்ற கழிவுகளை கொண்டு வந்து வளர்ப்பு குளத்தில் போட்டுவிடுகிறது, இதனால் குளத்தின் நீர்த்தரம் கெடுவதோடு தேவையில்லாத நோய்கள் மீன்களுக்கு பரவுகின்றன. இதுமாதிரியான வாய்ப்புகளை தவிர்க்க பறவை தடுப்பு வலைகள் ஒவ்வொரு குட்டைக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொழில்நுட்பம் சார்ந்த மீன் வளர்ப்பு





பொதுவாக காலை நேரங்களில் பிராணவாயு அளவு குறைந்து மீன்களுக்கு மூச்சு திணறல் ஏற்படுகிறது, அப்படி பிராண வாயு குறையும் போது குஞ்சுகளில் இறப்பு விகிதம் அதிகமான இருக்கும். மேலும் மீன்கள் தீவனம் எடுக்கும் திறன் மிகவும் குறைவாக இருக்கும். இந்த பிரச்சனைகளை சரிசெய்ய குளத்தின் மைய பகுதியில் நீர் இரைப்பான கருவியை பொருத்தியுள்ளேன். இந்த கருவி நீரை குளத்தின் அனைத்து பகுதிகளிலும் நீரை மேலிலிருந்து கீழாக தெளிக்கும் போது பிராணவாயு அளவு அதிகரிக்கிறது, இந்த

தொழில் நுட்பத்தினால் பிராண வாயு அளவு அதிகமாவதால் மீன் தீவனம் எடுக்கும் திறன் அதிகமாவதோடு மீனின் வளர்ச்சி விகிதம் அதிகரிக்கிறது, இந்த சிறு தொழில் நுட்பத்தை என்னுடைய பண்ணையில் ஆரம்பித்துயிருக்கிறேன். நீர் தெளிப்பான் அமைத்து இருப்பு செய்வதால் 25000–30000 / acre வரை குஞ்சுகள் விட்டு பராமரிரிக்க முடிகிறது. மீன் வளர்ப்பிற்கு 3 அடி ஆழம் போதுமானது. சூரிய ஒளி குளத்தின் அடிப்பாகம் வரை படுவதால் பிராணவாயு பிரச்சனைகள் எழ வாய்ப்பில்லை. அறுவடை செய்யப்பட்ட குளத்தில் நரிப்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. (படம் 2) இந்த நரிப்பயிர் ஆடுகளுக்கு ஒருசிறந்த தீவனமாக விளங்குகிறது. இம்மாதிரியான பயிர்களை பயிரிடுவதால் மண்ணிலுள்ள அம்னோனியா மற்றும் இதர நச்சுகளை இந்த தாவரம் சரிசெய்து விடுகிறது. மீன் வளர்ப்பு தவிர ஆடு, கோழி, வாத்து, வான்கோழி மற்றும் கரவை மாடு வளர்த்து வருகிறேன். மீன் குளத்தில் தாவர மிதவை உயிரியை உற்பத்தி செய்ய யூரியா, பொட்டாஷ் போன்ற கரிம உரங்களை பயன்படுத்தாமல் கனிம உரமான கோழி மற்றும் மாட்டு கழிவுகளை பயன்படுத்தி வருகிறேன். இதனால் உரத்திற்கான செலவு குறைகிறது. இவைகளை வளர்ப்பதன் மூலம் மேலும் எனக்கு வருமானத்தை ஈட்டு தருகிறது. நீர் மாற்றம் செய்யும் போது அந்த சாணம் மற்றும் கோழி கழிவுகள் இடப்பட்ட தண்ணீர் உளுந்து சாகுபடி செய்யப்பட்ட நிலத்திற்கு நீர் பாசனம் செய்கிறோம்.

ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பண்ணையாளரின் வெற்றிக்கதை – 2

பா.கண்ணன், க. ராஜேஷ், முனைவர் மு.நாகூர் மீரான்,

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்.



திரு. M. தெய்வமணி

எம். கொட்டகம்,

கெளுவத்தூர் (அஞ்சல்),

மன்னார்குடி (தாலுக்கா),

திருவாரூர் மாவட்டம்.

அலைபேசி : **09442887833**

எனது பெயர் திரு. S. தெய்வமணி, திருவாரூர் மாவட்டம், மா. கொட்டகம் என்னுமிடத்தில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு செய்து வருகிறேன். விவசாயம்தான் குடும்பத்தொழில், நான் பத்தாவது வரைக்கும் படிச்சிட்டு பில்டிங் கான்ட்ராக்டர் வேலை செய்ய ஆரம்பித்தேன். நல்ல வருமானம் கிடைச்சாலும், அமைதியான வாழ்க்கை வாழ முடியவில்லை. ஏந்நேரமும் வேலை டென்ஷனாகவே இருக்கும். அதனால் அமைதியைத் தேடி விவசாயத்துக்கே வந்துவிட்டேன். எங்களுக்கு 5 ஏக்கர் நிலம் இருக்கு, களிமண் பூமி, ஆனால் பள்ளக்கால் பகுதி, மழைக்கே கொஞ்சம் தண்ணீர் தேங்கிடும். அதனால் நெல் சாகுபடி கூட சரியாக பண்ண முடியாது. ஆகையால் வருடத்தில் ஒரு போகம் தான் விவசாயம் (குறுவை சாகுபடி) செய்வோம். நிலத்தடி நீரும் சற்று உப்புத்தன்மை இருக்கிறதனால வேற என்ன விவசாயம் செய்யலாம் என்று யோசனையில் இருந்தேன். அந்த சமயத்தில்தான் நீடாமங்கலம் வேளாண் அறிவியல் மையத்தில் பணிபுரிந்த பேராசிரியர்களின் ஆலோசனையின் பேரில் 1 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த மீன் பண்ணை தொழில்நுட்பத்தை தொடங்கினேன். என்னுடைய 5 ஏக்கர் நிலத்தில் 2 ஏக்கர் நிலத்தை விவசாயம் சார்ந்த மீன் வளர்ப்பை மேற்கொண்டு வருகிறேன். இதில் 1 ஏக்கர் மீன்வளர்ப்பு மற்றும் 1 ஏக்கரில் நெல் சாகுபடியும் செய்து வருகிறேன். அதன் கரைகளை சுற்றி கத்தரி, வெண்டை, மிளகாய், வாழை, உளுந்து மற்றும் தென்னை போன்றவைகள் பயிரிடப்பட்டு செம்மையாக செய்து வருகிறேன். மற்றொரு 1 ஏக்கர் பகுதியில் வெவ்வேறு அளவுகளில் 6 பண்ணைக் குட்டைகளாக வெட்டி அதில் மீன் மற்றும் அசோலா வளர்ப்பை மேற்கொண்டு வருகிறேன். தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் சென்று அங்கு நடத்தப்பட்ட பண்ணைக் குட்டையில் மீன்வளர்ப்பு பயிற்சியில் கலந்து கொண்டேன். அந்த பயிற்சியில் பல்வேறு விதமான மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களை பற்றி விரிவுப்படுத்தினார்கள். தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக வல்லுனர்களில் அறிவுறுத்தலின் படி மீன் குஞ்சு பொரிப்பகங்களில் இருந்து ஒரு நாள் வயதுடைய மீன்குஞ்சுகளை வாங்கி மூன்று மாதங்கள் வரை வளர்த்து விற்பனை செய்து கொண்டு வருகிறேன். கட்லா,

ரோகு, மிர்கால், போட்லா, புல்கெண்டை என்ற ஒவ்வொரு ரகத்திலும் 2 இலட்சம் குஞ்சுகள் என்று மொத்தம் 10 லட்சம் குஞ்சுகளை ரூ.15,000/– க்கு வாங்குவேன். இந்த 5 வகையான மீன்களை தனித்தனியான குளங்களில் விட்டு மூன்று மாதம் வரை வளர்த்தால், ஒவ்வொரு மீன் குஞ்சுகளும் சராசரியாக 30 கிராம் வரை வளரும். இந்த சமயத்தில் ஒரு குஞ்சு விலை ரூ.2 என்று விற்பனை செய்து விடுவேன் தவிடு மற்றும் புண்ணாக்கு கலவைதான் தீவனமாக அளித்து கொண்டு வருகிறேன். 10 லட்சம் குஞ்சுகள் விட்டாலும் மூன்று மாதங்களுக்கு பிறகு ஒன்றரை லட்சம் குஞ்சுகள் மட்டும் தான் விற்பனைக்கு தேறும். அதாவது 15 சதவீதம் தான் பிழைப்பு திறன் கிடைக்கும். இதன் மூலம் குறைந்தது 3 லட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. செலவுகளை தவிர்த்து 2.5 லட்சம் லாபம் கிடைக்கும். 6 குட்டைகளை உள்ளடக்கிய பகுதியில் ஒரு குட்டையில் (30x30) அசோலா வளர்த்து பண்ணையாளர்களுக்கு வழங்கி வருகிறேன். இந்த அசோலா வளர்ப்பிற்கு குளத்தில் 3 அடி உயரத்திற்கு தண்ணீர் இருக்கிற மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டும். 10 நாட்களுக்கு ஒரு முறை 20 கிலோ பச்சை சாணத்தை கரைத்து தண்ணீரின் மேற்பரப்பில் தெளித்து விடுவேன். மாதம் ஒரு தடவை 100 மி.லி. வேப்பெண்ணெயை 3 லிட்டர் தண்ணீரில் கலந்து அசோலா மேலே தெளித்து விட்டால் பூச்சிகள் வராமல் பார்த்துக்கொள்ளலாம். என்னுடைய பண்ணையில் மாடு, ஆடு, கோழி மற்றும் மீன்களுக்கு இந்த அசோலா தீவனம் போக மாதம் 20 கிலோ அளவிற்கு மேல் அசோலாவை விற்பனை செய்து வருகிறோம். ஒரு கிலோ 50 ரூபாய் வீதம் 20 கிலோவிற்கு மாதம் 1000 ரூபாய் என ஒரு வருடத்திற்கு 12,000/– ரூபாய் வரை இலாபம் கிடைக்கிறது. இதில் எனக்கு எந்த செலவும் கிடையாது. வரவு மட்டும் தான்.



ஆடு, மாடு மற்றும் கோழியுடன், மீன் வளர்ப்பு செய்து வருகிறேன். இவைகளுக்கான தீவன செலவை குறைப்பதற்காகவே குளத்தின் கரை மற்றும் பயன்படுத்தாத இடங்ளில் கோ 3, கோ 4 வகை

புல்களை பயிரிட்டு வளர்த்து வருகிறேன். என்னுடைய பண்ணையில் கட்லா, ரோகு, மிர்கால் போன்ற இந்திய கெண்டை மீன்களை வளர்த்து வருகிறேன். இதற்கான தீவன செலவு 3 ல் ஒருபங்கு குறைத்து அதற்கு பதில் இந்த அசோலாவை தீவனமாக கொடுத்து வருகிறேன். 1 குளத்தின் மேல்பகுதி மற்றும் தரைபகுதியில் கோழி கொட்டகை அமைத்திருக்கிறேன். கோழி கழிவு மீன்களுக்கு நல்ல உணவாகவும் மேலும் தாவர மிதவை உயிரி வளர்வதற்கும் ஏற்றதாக



அமைகிறது. இந்த கோழி – மீன்வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது. தின வருமானத்தை பொறுத்தவரை கோழி முக்கிய பங்காற்றுகிறது. இதிலிருந்து கிடைக்கும் முட்டை நல்லதொரு வருமானத்தை ஈட்டி தருகிறது. கோழி வளர்ப்பு மூலமாக எனக்கு ஒரு வடத்திற்கு 15,500/– ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. பரணி மேல் ஆடு வளர்ப்பு முறையை என்னுடைய பண்ணையில் அமைத்திருக்கிறேன். அதில் 7 ஆடுகளை வளர்க்கிறேன். இது வருடத்திற்கு 10 முதல் 12 குட்டிகள் இடுகின்றன. இதன் மூலமாக எனக்கு ரூ.30 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக வல்லுநர்களின் தூண்டுதலின் பேரில் ஹாப்பா தொழில்நுட்பத்தை என்னுடைய பண்ணையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை 1 வருடத்திற்கு 2 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பின் மூலமாக சுமார் ரூ. 4,50,000 வரை கிடைக்கிறது. இத்தொழிலில் தென்னை, மகாகனி, தேக்கு, பணப்பயிர் போன்றவைகள் இந்த குளங்களை சுற்றி நட்டு வைத்துள்ளேன்.



குறைந்த நிலங்களாக இருந்தாலும் இன்னும் நிறைய தொழில்நுட்பங்கள் வளர வேண்டும். சக பண்ணையாளர்களுக்கும் புது தொழில்நுட்பங்கள் கையாண்டு மீன் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இம்மாதிரியான தொழில்நுட்பத்தை கற்றுத்தந்த பேராசிரியர்கள், வேளாண் அறிவியல் நிலைய (KVK) நீடாமங்கலம் மற்றும் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நான் வேளாண்மை பல்கலைக்கழகத்திலிருந்து வேளாண்மை செம்மல் விருதினை பெற்றிருக்கிறேன் என்பதையும் இந்த முடிவுரை குறிப்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"முதலில் முயற்சி மேற்கொள்ளுவோம், பின்பு வெற்றி பெறுவோம்."

நன்றி